① May 3, 1968 கையெழுத்தின் 4 வசக்கோணவியலின் பதிவு. 2nd copy A22

| ▲ | △ | 1 | 2 | 3 | 4 | △ | △ | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | A | ✓ | ✓ | ✓ | ✓ | C | A | ✓ | ✓ | ✓ | × |
| A | B | ✓ | ✓ | ✓ | ✓ | C | B | ✓ | ✓ | ✓ | × |
| A | C | ✓ | ✓ | ✓ | ✓ | C | C | ✓ | ✓ | ✓ | ✓ |
| A | D | ✓ | ✓ | ✓ | ✓ | C | D | ✓ | ✓ | ✓ | ✓ |
| A | E | ✓ | ✓ | ✓ | ✓ | C | E | ✓ | ✓ | ✓ | ✓ |
| A | F | ✓ | ✓ | ✓ | ✓ | C | F | ✓ | ✓ | ✓ | ✓ |
| A | G | ✓ | ✓ | ✓ | ✓ | C | G | ✓ | ✓ | ✓ | ✓ |
| A | H | ✓ | ✓ | ✓ | ✓ | C | H | ✓ | ✓ | ✓ | × |
| A | I | ✓ | ✓ | ✓ | ✓ | C | I | ✓ | ✓ | ✓ | ✓ |
| A | J | ✓ | ✓ | ✓ | ✓ | C | J | ✓ | ✓ | ✓ | ✓ |
| A | K | ✓ | ✓ | ✓ | ✓ | C | K | ✓ | ✓ | ✓ | ✓ |
| A | L | ✓ | ✓ | ✓ | ✓ | C | L | ✓ | ✓ | ✓ | ✓ |
| A | M | ✓ | ✓ | ✓ | ✓ | C | M | ✓ | ✓ | ✓ | ✓ |
| A | N | ✓ | ✓ | ✓ | ✓ | C | N | ✓ | ✓ | ✓ | ✓ |
| A | O | ✓ | ✓ | ✓ | ✓ | C | O | ✓ | ✓ | ✓ | ✓ |

| ▲ | △ | 1 | 2 | 3 | 4 | △ | △ | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | A | ✓ | ✓ | ✓ | × | D | A | ✓ | ✓ | ✓ | × |
| B | B | ✓ | ✓ | ✓ | ✓ | D | B | ✓ | ✓ | ✓ | × |
| B | C | ✓ | ✓ | ✓ | ✓ | D | C | ✓ | ✓ | ✓ | ✓ |
| B | D | ✓ | ✓ | ✓ | ✓ | D | D | ✓ | ✓ | ✓ | ✓ |
| B | E | ✓ | ✓ | ✓ | ✓ | D | E | ✓ | ✓ | ✓ | ✓ |
| B | F | ✓ | ✓ | ✓ | ✓ | D | F | ✓ | ✓ | ✓ | ✓ |
| B | G | ✓ | ✓ | ✓ | ✓ | D | G | ✓ | ✓ | ✓ | ✓ |
| B | H | ✓ | ✓ | ✓ | × | D | H | ✓ | ✓ | ✓ | × |
| B | I | ✓ | ✓ | ✓ | ✓ | D | I | ✓ | ✓ | ✓ | × |
| B | J | ✓ | ✓ | ✓ | ✓ | D | J | ✓ | ✓ | ✓ | ✓ |
| B | K | ✓ | ✓ | ✓ | ✓ | D | K | ✓ | ✓ | ✓ | ✓ |
| B | L | ✓ | ✓ | ✓ | ✓ | D | L | ✓ | ✓ | ✓ | ✓ |
| B | M | ✓ | ✓ | ✓ | ✓ | D | M | ✓ | ✓ | ✓ | ✓ |
| B | N | ✓ | ✓ | ✓ | ✓ | D | N | ✓ | ✓ | ✓ | ✓ |
| B | O | ✓ | ✓ | ✓ | ✓ | D | O | ✓ | ✓ | ✓ | ✓ |

| Δ | Δ | 1 | 2 | 3 | 4 | Δ | Δ | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| E | A | ✓ | ✓ | ✗ | ✗ | F | A | ✓ | ✓ | ✗ | ✗ |
| E | B | ✓ | ✓ | ✗ | ✗ | F | B | ✓ | ✓ | ✗ | ✗ |
| E | C | ✓ | ✓ | ✗ | ✓ | F | C | ✓ | ✓ | ✗ | ✗ |
| E | D | ✓ | ✓ | ✓ | ✓ | F | D | ✓ | ✓ | ✓ | ✗ |
| E | E | ✓ | ✓ | ✓ | ✓ | F | E | ✓ | ✓ | ✓ | ✗ |
| E | F | ✓ | ✓ | ✓ | ✓ | F | F | ✓ | ✓ | ✓ | ✓ |
| E | G | ✓ | ✓ | ✓ | ✓ | F | G | ✓ | ✓ | ✓ | ✓ |
| E | H | ✓ | ✓ | ✓ | ✗ | F | H | ✓ | ✓ | ✓ | ✗ |
| E | I | ✓ | ✓ | ✓ | ✗ | F | I | ✓ | ✓ | ✓ | ✗ |
| E | J | ✓ | ✓ | ✓ | ✗ | F | J | ✓ | ✓ | ✓ | ✓ |
| E | K | ✓ | ✓ | ✓ | ✓ | F | K | ✓ | ✓ | ✓ | ✓ |
| E | L | ✓ | ✓ | ✓ | ✓ | F | L | ✓ | ✓ | ✓ | ✓ |
| E | M | ✓ | ✓ | ✓ | ✓ | F | M | ✓ | ✓ | ✓ | ✓ |
| E | N | ✓ | ✓ | ✓ | ✓ | F | N | ✓ | ✓ | ✓ | ✓ |
| E | O | ✓ | ✓ | ✓ | ✓ | F | O | ✓ | ✓ | ✓ | ✓ |

| Δ | Δ | 1 | 2 | 3 | 4 | Δ | Δ | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| G | A | ✓ | ✓ | ✗ | ✗ | H | A | ✓ | ✓ | ✓ | ✗ |
| G | B | ✓ | ✓ | ✗ | ✗ | H | B | ✓ | ✓ | ✓ | ✗ |
| G | C | ✓ | ✓ | ✗ | ✗ | H | C | ✓ | ✓ | ✓ | ✓ |
| G | D | ✓ | ✓ | ✓ | ✗ | H | D | ✓ | ✓ | ✓ | ✓ |
| G | E | ✓ | ✓ | ✓ | ✗ | H | E | ✓ | ✓ | ✓ | ✗ |
| G | F | ✓ | ✓ | ✓ | ✗ | H | F | ✓ | ✓ | ✓ | ✓ |
| G | G | ✓ | ✓ | ✓ | ✓ | H | G | ✓ | ✓ | ✓ | ✓ |
| G | H | ✓ | ✓ | ✗ | ✗ | H | H | ✓ | ✓ | ✓ | ✓ |
| G | I | ✓ | ✓ | ✗ | ✗ | H | I | ✓ | ✓ | ✓ | ✓ |
| G | J | ✓ | ✓ | ✓ | ✓ | H | J | ✓ | ✓ | ✓ | ✓ |
| G | K | ✓ | ✓ | ✓ | ✓ | H | K | ✓ | ✓ | ✓ | ✓ |
| G | L | ✓ | ✓ | ✓ | ✓ | H | L | ✓ | ✓ | ✓ | ✓ |
| G | M | ✓ | ✓ | ✓ | ✓ | H | M | ✓ | ✓ | ✓ | ✓ |
| G | N | ✓ | ✓ | ✓ | ✓ | H | N | ✓ | ✓ | ✓ | ✓ |
| G | O | ✓ | ✓ | ✓ | ✓ | H | O | ✓ | ✓ | ✓ | ✓ |

| Δ | Δ | 1 | 2 | 3 | 4 | Δ | Δ | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| I | A | ✓ | ✓ | ✓ | × | J | A | ✓ | × | × | × |
| I | B | ✓ | ✓ | ✓ | × | J | B | ✓ | × | × | × |
| I | C | ✓ | ✓ | ✓ | × | J | C | ✓ | × | × | × |
| I | D | ✓ | ✓ | ✓ | × | J | D | ✓ | ✓ | × | × |
| I | E | ✓ | ✓ | ✓ | × | J | E | ✓ | ✓ | × | × |
| I | F | ✓ | ✓ | ✓ | × | J | F | ✓ | ✓ | × | × |
| I | G | ✓ | ✓ | ✓ | ✓ | J | G | ✓ | ✓ | ✓ | × |
| I | H | ✓ | ✓ | ✓ | × | J | H | ✓ | × | × | × |
| I | I | ✓ | ✓ | ✓ | ✓ | J | I | ✓ | × | × | × |
| I | J | ✓ | ✓ | ✓ | ✓ | J | J | ✓ | ✓ | ✓ | ✓ |
| I | K | ✓ | ✓ | ✓ | ✓ | J | K | ✓ | ✓ | ✓ | ✓ |
| I | L | ✓ | ✓ | ✓ | ✓ | J | L | ✓ | ✓ | ✓ | ✓ |
| I | M | ✓ | ✓ | ✓ | ✓ | J | M | ✓ | ✓ | ✓ | ✓ |
| I | N | ✓ | ✓ | ✓ | ✓ | J | N | ✓ | ✓ | ✓ | ✓ |
| I | O | ✓ | ✓ | ✓ | ✓ | J | O | ✓ | ✓ | ✓ | ✓ |

| Δ | Δ | 1 | 2 | 3 | 4 | Δ | Δ | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | A | ✓ | × | × | × | L | A | ✓ | × | × | × |
| K | B | ✓ | × | × | × | L | B | ✓ | × | × | × |
| K | C | ✓ | × | × | × | L | C | ✓ | × | × | × |
| K | D | ✓ | × | × | × | L | D | ✓ | × | × | × |
| K | E | ✓ | × | × | × | L | E | ✓ | × | × | × |
| K | F | ✓ | × | × | × | L | F | ✓ | × | × | × |
| K | G | ✓ | ✓ | × | × | L | G | ✓ | × | × | × |
| K | H | ✓ | × | + | × | L | H | ✓ | × | × | × |
| K | I | ✓ | × | × | × | L | I | ✓ | × | × | × |
| K | J | ✓ | ✓ | ✓ | × | L | J | ✓ | ✓ | × | × |
| K | K | ✓ | ✓ | ✓ | ✓ | L | K | ✓ | ✓ | ✓ | × |
| K | L | ✓ | ✓ | ✓ | ✓ | L | L | ✓ | ✓ | ✓ | ✓ |
| K | M | ✓ | ✓ | ✓ | ✓ | L | M | ✓ | ✓ | ✓ | ✓ |
| K | N | ✓ | ✓ | ✓ | ✓ | L | N | ✓ | ✓ | ✓ | ✓ |
| K | O | ✓ | ✓ | ✓ | ✓ | L | O | ✓ | ✓ | ✓ | ✓ |

| Δ | Δ | 1 | 2 | 3 | 4 | Δ | Δ | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| M | A | ✓ | × | × | × | N | A | ✓ | × | × | × |
| M | B | ✓ | × | × | × | N | B | ✓ | × | × | × |
| M | C | ✓ | × | × | × | N | C | ✓ | × | × | × |
| M | D | ✓ | × | × | × | N | D | ✓ | × | × | × |
| M | E | ✓ | × | × | × | N | E | ✓ | × | × | × |
| M | F | ✓ | × | × | × | N | F | ✓ | × | × | × |
| M | G | ✓ | × | × | × | N | G | ✓ | × | × | × |
| M | H | ✓ | × | × | × | N | H | ✓ | × | × | × |
| M | I | ✓ | × | × | × | N | I | ✓ | × | × | × |
| M | J | ✓ | × | × | × | N | J | ✓ | × | × | × |
| M | K | ✓ | × | × | × | N | K | ✓ | × | × | × |
| M | L | ✓ | × | × | × | N | L | ✓ | × | × | × |
| M | M | ✓ | ✓ | ✓ | ✓ | N | M | ✓ | ✓ | × ? | × |
| M | N | ✓ | ✓ | ✓ | ✓ | N | N | ✓ | ✓ | ✓ | ✓ |
| M | O | ✓ | ✓ | ✓ | ✓ | N | O | ✓ | ✓ | × ? | × |

| Δ | Δ | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|
| O | A | ✓ | × | × | × |
| O | B | ✓ | × | × | × |
| O | C | ✓ | × | × | × |
| O | D | ✓ | × | × | × |
| O | E | ✓ | × | × | × |
| O | F | ✓ | × | × | × |
| O | G | ✓ | × | × | × |
| O | H | ✓ | × | × | × |
| O | I | ✓ | × | × | × |
| O | J | ✓ | × | × | × |
| O | K | ✓ | × | × | × |
| O | L | ✓ | × | × | × |
| O | M | ✓ | ✓ | [illegible] | × ? |
| O | N | ✓ | ✓ | ✓ | ✓ |
| O | O | ✓ | ✓ | ✓ | ✓ |

May 3, 1968 கடிதத்தின் சிலபதில்கள்.

4 வது கேள்வி.

பதில்: இக்கேள்விக்கு தயாரித்துள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள பதில்கள் எல்லாம் அம்மா(பாப்பம்மா) அவர்களிடம் கேட்டுத்தான் எழுதினேன். இந்தப்பதில் ஓரளவுக்கு சரியாக இருக்குமென்றே நான் நினைக்கிறேன். ஆனாலும், இக்காலத்தில் நிறைய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. அது: உதாரணமாக ஒரு கவுண்டர் வீட்டிற்கு ரொம்பவும் பணவசதியுள்ள நாடார் அல்லது ஒரு பெரிய வேலை (சர்க்கார் வேலை)யில் இருக்கும் ஒரு நாடார் வந்தால் அவருக்கு கவுண்டர் வீடுகளில் எந்த இடத்திலும் வேண்டுமானாலும் அமருவதற்கு ஆசனமளிப்பார்கள். இதுமாதிரி பலமாறுதல்கள் உண்டு ஆகையால், இதுபற்றி சரியாக எல்லாம் கூற முடியாது.

6 வது கேள்வி.

பதில்: மஞ்சள்நீர் விளையாடுவது முக்கியமாக கோவில் விசேஷம் முடிந்ததும் விளையாடுவார்கள். மற்றும் சில ஜாதியர் கல்யாணங்களில் கல்யாணம் முடிந்ததும் மஞ்சள் நீர் விளையாடுவார்கள். இந்த மஞ்சள் நீர் விளையாடுவதின் முக்கியநோக்கம் மேற்கண்ட காரியங்கள் மங்களகரமாக நல்ல முறையில் நடந்து முடிந்துவிட்டது என்பதை குறிப்பதற்காக மக்கள் அவ்வாறு ஒரு விழா முடிந்தபின் மஞ்சள் நீர் கொண்டாடுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

தவிர, இந்த மஞ்சள் நீர் விளையாடுவது மக்களை குளிரவைக்கிறது. அவ்வாறு நினைக்கலாம்.

8 வது கேள்வி.

பதில்: மாரியம்மன் திருவிழாவின் போது எந்தவிதமான தானியங்களையும் போட்டு முளைக்க வைப்பதில்லை. அவ்வாறு செய்வது சிவன் கோவிலில் நடைபெறுகிறது. அதை "மொளைப்பாலிகை" என்று சொல்வார்கள். இதை திருவிழா முடிந்தபின்னர் கிணற்றில் கொண்டுபோய் விட்டுவிடுவார்கள்.

மேற்கண்ட பல நவதானியங்கள் போட்டு முளைக்கவைப்பது பற்றி என்னுடைய யோசனை என்னவென்றால், மொளைப்பாலிகை நன்றாக முளைத்து வளர்ந்திருந்தால் அந்த வருஷம் பூராவும் அக்கோவிலைச் சேர்ந்த கிராமம் நல்ல முறையில் செல்வாக்காக இருக்குமென்று ஒரு குறிப்பாகவைத்து அவ்வாறு செய்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

10 வது கேள்வி.

பதில்: ஒரு மனிதன் தன்னுடைய கைகளை பால்பாத்திரத்தின் மேல் நீட்டி கடவுள் முன் சத்தியம் செய்யும் பழக்கம் இங்கு இல்லை. ஆனால், ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம் சத்தியம் வாங்க வேண்டுமென்றால் ஏதோ ஒரு முக்கியமான தெய்வத்தின் முன் ஒரு கட்டு சூடத்தைப் பொருத்தி வைத்து விடுவான். அப்போது சத்தியம் செய்து கொடுக்கும் மனிதன் தன்னுடைய வலது கையால் அந்த சூடத்தின் மேல் அடித்து (சூடம் எரிவதை அணைத்து) சத்தியம் செய்வான்.

ஒரு மனிதன் தன்னுடைய துண்டை தரையில் போட்டு சத்தியம் செய்வது உண்டு. அந்த மனிதன் தான் செய்யப் போகும் சத்தியத்திற்கு தன்னுடைய உடம்பையே வைத்து சத்தியம் செய்வதாக நினைத்து தன்னுடைய மேல் துண்டை பூமி மேல் போட்டு அதைத் தாண்டி சத்தியம் செய்கிறேன் என்று நினைக்கிறேன். இதை "தன் மேல் ஆணை" என்று கூடக் கூறலாம். ஆகையால், இது ஒரு பெரிய சத்தியமென்றே சொல்லலாம்.

மற்றும் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு சத்தியம் செய்து கொடுக்க வேண்டுமென்றால் சத்தியம் வாங்கிக் கொள்கிறவன் கை மேல் தன்னுடைய வலது கையால் அடிப்பான். இது ஒரு சத்தியமாகக் கருதப்படுகிறது.

மற்றும் சத்தியம் வாங்கிக் கொள்வோரின் தலைமேல் சத்தியம் செய்து கொடுப்பவர் தன்னுடைய வலது கையால் அடித்து சத்தியம் செய்வான். இதுவும் ஒரு சத்தியமாகக் கருதப்படுகிறது.

சத்தியம் செய்வதின் முக்கியம் என்னவென்றால்,
உதாரணமாக ஒரு மனிதனுடைய பணத்தை இன்னொரு மனிதன் எடுத்துக் கொண்டான் என்று வைத்துக் கொள்வோம். பணத்தை அவன் எடுத்திருந்தாலும் அல்லது எடுக்காவிட்டாலும் பணத்தை பறிகொடுத்தவன் குறிப்பிட்ட ஒருவனை "நீதான் என்னுடைய பணத்தை திருடிக் கொண்டாய்" என்று சொல்வான். அதற்கு அவன் "உன்னுடைய பணத்தை நான் எடுக்கவில்லை" யென்று சொல்வான். அதற்கு பணத்தை பறிகொடுத்தவன் "சரி நீ என்னுடைய பணத்தை எடுக்கவில்லை யென்று சத்தியம் செய்து கொடு" என்று சொல்வான். அதற்கு மற்றவன் ஒப்புக் கொண்டு "சத்தியமாக உன்னுடைய பணத்தை நான்

"எடுக்கவில்லை" யென்று மேற்கண்ட சத்திய முறைகளில் ஏதோ ஒரு சத்தியத்தை செய்வான். அவ்வளவுதான் அவன் பணத்தை எடுக்கவில்லை யென்ற நம்பிக்கையில் விட்டுவிடுவார்கள். இதுமாதிரி மற்றும் சில காரியங்களுக்கும் சத்தியம் செய்யும் பழக்கமுண்டு.

11 வது கேள்வி:

பதில்: ~~ஒரு~~ ஒரு குடும்பத்தினர் மற்றொரு குடும்பத்தினர்மேல் சாபமிட வேண்டுமென்றால், முதலில் கூறப்பட்டுள்ள குடும்பத்தினர் உப்புச்சட்டியைக் கொண்டுபோய் இரண்டாவது கூறப்பட்டவரின் வீட்டு வாசற்படி மேல் கொண்டுபோய் போட்டு உடைப்பார்கள். இந்த மாதிரி முன் காலத்தில் தான் நடைபெற்றது இப்போது இல்லை யென்று சொல்கிறார்கள்.

மேற்கண்டபடி உப்புப்பானையைப் போட்டு உடைத்து சாபம் கொடுக்கும் காரணம், "அந்த உப்புப்பானை உடைவதுபோல அவர்களுடைய குடும்பம் உடைந்து கெட்டுப் போகட்டும்" என்று நினைத்து அவ்வாறு செய்வதாக இருக்கலாம்.

மற்றபடி மூன்று ரோடு சந்திக்கும் இடத்தில் மண்ணை எடுத்து வந்து அதை ஒருவர் வீட்டின் முன்போ அல்லது வீட்டு வாசற்படி ~~முன்போ~~ மேலோ போட்டு ~~சக~~ அக்குடும்பத்தின் மேல் சாபமிடும் பழக்கம் இங்கு இல்லை.

12 வது கேள்வி

பதில்: நீங்கள் குறிப்பிட்டபடி இங்குள்ள வீடுகளின் கதவுப்படியில் கருப்பு நிறமுள்ள அடையாளம் எதுவும் இருக்காது. அந்த மாதிரி அடையாளமும் செய்யமாட்டார்கள். தவிர, உடைந்துபோன மண்பானை ~~ஓடுகளையும்~~ ஓட்டுத்துண்டை வீட்டின் வாயிற்படியின் மேல் வைக்கும் பழக்கமும் இங்கு இல்லை. ஆகையால், இவைகளைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது.

மற்றபடி இக்காலத்தின் பெரியோர்கள் சாபமிடும் பழக்கம் சில உண்டு.

அது: ஒரு மனிதன் தன்னுடைய விரோதியின் குடும்பத்தை நோக்கி

1. "அவன் குடும்பம் நாசமாய் போகட்டும்
2. மாரியாத்தா நீயே கேளு
3. மாகாளியாத்தா நீயே கேளு
4. அவன் வீட்டில் விடிக்கிறதுக்கு கஞ்சியில்லாமல் போகவேணும்"

இவ்வாறு தெய்வத்தின் பெயரைச் சொல்லி பலவாறு சாபமிடுவார்கள்.

14 வது கேள்வி.

பதில்: புதிதாக ஒரு விருந்தினர் ஒரு வீட்டுக்கு வந்தால் அந்த வீடு நல்ல வசதியுள்ள குடும்பமாக இருந்தால் அரிசியால் செய்த சாதம், பொரியல் 3, 4 வகைகள், பருப்பு, நெய், புளிக்குழம்பு, கூட்டு, மோர்க் குழம்பு, தயிர் பச்சடி, ரசம், தயிர், அப்பளம், வடை, பாயாசம், பழம், ~~அல்வா, கேசரி~~ ஆகியவைகளும். மற்றும் அல்வா, கேசரி மைசூர்பாகு, லட்டு இவைகளில் ஏதோ ஒரு இனிப்பு பலகாரம் இவைகள் எல்லாவற்றுடனும் விருந்தினர்க்கு உணவு அளிப்பார்கள்.

வசதியில்லாத குடும்பமாக இருந்தால் அவர்கள் வீட்டிற்கு ஒரு விருந்தினர் வந்தால் அவருக்கு அரிசி சாதத்துடன் பருப்பு, ஒரு குழம்பு, ரசம், ஒரு பொரியல் இவைகளுடன் மட்டுமே உணவு கொடுப்பார்கள்.

மற்றபடி கடவுளுக்கு படைக்கப்படும் உணவுகளில் சர்க்கரைப் பொங்கல், உளுந்துப்பருப்பு வடை, பாசிப்பருப்பு பாயாசம், தேன், தினைமாவு, ஆரஞ்சுப்பழம், மாம்பழம், பலாப்பழம், விளாம் பழம், திராட்சைப் பழம் இவைகள் எல்லாம் சிறந்த உணவாக நினைக்கிறேன்.

வேலையாட்களுக்கு அரிசிச் சோறு, சோளச்சோறு, கம்மஞ்சோறு, ராகிக்களி இவைகள் எல்லாம் கொடுப்பார்கள். ஆனால், அவர்களுக்கு எப்போதும் கொடுக்கும் சிறந்த உணவுகள் ராகிக்களி, சோளச் சோறு, கம்மஞ்சோறு ஆகிய உணவுகளை அளிப்பார்கள். ஒருவர் இன்னொருவருக்கு கொடுக்கும் உணவுகளில் சிறந்ததாகக் கருதுவது இந்த விஷயம் முதலில் குறிப்பிட்டுள்ள உணவுகள் தான்.

முன்னோர்களுக்கு படைக்கப்படும் உணவுகளில் சிறந்தது எது? என்று பொதுவாகக் கூற முடியாது. அதுபற்றி உதாரணமாக முன்னோர்கள் உயிருடன் இருக்கும்போது அதிகமாக விரும்பி சாப்பிட்ட உணவுகளையே அவர் இறந்த பின்னும் ~~அவர்க்கு அவர் விரும்பிய உ~~ படைத்து பூஜை செய்வார்கள். ஆகையால் அவர்கள் விரும்பிய உணவையே சிறந்த உணவாகக் கருதலாம்.

9.

May 3, 1968 கடிதத்தின் 7வது கேள்வி.

பதில்: ஒவ்வொரு வருஷத்தில் வரும் தமிழ் மாதங்களின் (12 மாதங்களின்) ~~பெயர்~~ பெயர் கீழே:

1. சித்திரை
2. வைகாசி
3. ஆனி
4. ஆடி
5. ஆவணி
6. புரட்டாசி
7. ஐப்பசி
8. கார்த்திகை
9. மார்கழி
10. தை
11. மாசி
12. பங்குனி

மேலே கண்ட 12 மாதங்களில் வரும் பண்டிகைகளை முக்கியமாக இந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் கொண்டாடும் பண்டிகைகளை மட்டும் குறிப்பிடுகிறேன். அது:

சித்திரைமாதம் 1ந்தேதி (தமிழ்வருஷப்பிறப்பு)
ஆடிமாதம் 18 நோன்பு
புரட்டாசி சனிக்கிழமை & ஆயுதபூஜை
ஐப்பசிமாதம் தீபாவளி
கார்த்திகை மாதம் ஜோதி / கார்த்திகை தீபம்.
மார்கழி மாதம் திருவாதிரை நோன்பு
,, போகிப்பண்டிகை (சங்கராந்தி நோன்பு)
தைமாதம் பெரியபொங்கல், மாட்டுப்பொங்கல், தைப்பூசம்.

மாசிமாதம் சிவன்ராத்திரி.
பங்குனி யுகாதி நோன்பு.

மேலே கண்ட பண்டிகைகளை இவ்வட்டாரத்தில் உள்ள மக்கள் அதாவது கிறிஸ்தவர், முஸ்லீம் ஆகிய இரண்டு ஜாதிகளைத் தவிர இந்து மக்கள் அனைவரும் கொண்டாடுவார்கள். தவிர, வருஷத்தில் ஒவ்வொரு மாதமும் வரும் அம்மாவாசை நாட்களில் சிவன்ராத்திரி, தைமாதம் அம்மாவாசை, ஆடிமாதம் அம்மாவாசை, புரட்டாசிமாதம் ~~அமா~~ அம்மாவாசை ஆகியவைகளை சிறந்ததாக மக்கள் கருதுகிறார்கள். அந்த நாட்களில் மக்கள் கோவில்களுக்கு அதிகமாகச் செல்வார்கள்.

ஈ வருஷத்தில் ஒவ்வொருமாதமும் வரும் 12 அம்மாவாசை நாட்களையும் பிராமணர், கணக்கப்பிள்ளை, சோளி & கொங்கு

4.

ஆசாரிகள், கோமுட்டி செட்டியார் ஆகிய ஜாதியினர்கள் அவர்கள் வீடுகளை மெழுகி குளித்துக் கொண்டுதான் சாப்பிடுவார்கள். இவர்களைத் தவிர மற்ற ஜாதியினர் ஒவ்வொரு மாதமும் வரும் அம்மாவாசையை அதிகமாகக் கருதமாட்டார்கள். ஏதோ சில குடும்பங்களில் மட்டும் அந்நாட்களில் கோவில்களுக்கு(ச்) சென்று வருவார்கள்.

தவிர, சூரியன் & சந்திரன் ஆகிய கிரஹணத்தை எல்லா ஜாதியினரும் (முஸ்லீம், கிறிஸ்தவர்தவிர) கொண்டாடுவார்கள்.

தவிர, ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கிற ஈஸ்வரன், பத்ரகாளிதேர், மாரியம்மன், மாகாளியம்மன் பொங்கல் இவைகளையும் குறிப்பிட்ட மாதங்களில் (வருஷத்தில் ஒருமுறை) கொண்டாடுவார்கள்.

May 3, 1968.
13வது கேள்வியின் பதில்:

பித்தம் என்பது டீ, காபி, பனைமரத்தின் பதனீர், பனைமரத்தின் பழம், எள்ளு, நரிப்பயிறு, வேர்க்கடலை இவைகளில் எல்லாம் பித்தம் இருப்பதாகச் சொல்கிறார்கள். இதுமாதிரி பித்தத்திற்கு சம்மந்தப்பட்ட பொருள்களை அடிக்கடி தினமும் சாப்பிட்டால் காலையில் தூக்கத்திலிருந்து எழுந்தவுடன் சிறிது நேரம் நம் தலை சுற்றுவது போல் இருக்கும், மயக்கம் வரும், தலையில் பாரமேறியது போலிருக்கும், தலைவலியுண்டாகும்.

2. வாயு என்பது பலபொருள்களில் இருக்கிறது.
அது: கொள்ளு, மொச்சைப்பருப்பு, தட்டப்பருப்பு, நரிப்பயிறு, உருளைக்கிழங்கு, வாழைக்காய், கொத்தவரங்காய், முருங்கைக்காய், கோதுமை, சோளம், கடலைப்பருப்பு, அரசாணிக்காய், கோழிக்கறி, எருமைப்பால், சர்க்கரைவள்ளிக்கிழங்கு இவைகள் எல்லாம் வாயு உடம்புள்ளவர்கள் சாப்பிட்டால் அது அவர்களை பலவகையில் கஷ்டப்படுத்தும். வயிறு, முதுகு, இடுப்பு இவைகள் எல்லாம் வலி ஏற்படும். சில சமயங்களில் உடம்பு பூராவும் வலிக்கும்.

உதாரணமாக மேற்கண்ட பொருள்களில் ஏதோ ஒன்றை நான் (சுந்தரம்) ஒரு நாளைக்கு சாப்பிட்டால் போதும், அன்று பூராவும் எனக்கு இலேசான வயிற்று வலி, இடுப்புவலி, முதுகுவலி மற்றும் வயிறு பசியாகாமல் கிம்மென்று இருப்பது போலவும் இப்படி பலவகையான கஷ்டம் ஏற்படுத்தும். எனக்கும் வாயு உடம்பு உள்ளது என்பதை அவைகளால் தெரிந்து கொண்டேன்.
வாயு உடம்பு இல்லாதவர்கள் மேற் சொன்ன பொருள்களை எல்லாம் சாப்பிடலாம் அது அவர்களை ஒன்றும் செய்யாது.

தமிழ் வருடப்பிறப்பு என்பது ஒவ்வொரு வருடமும் வரும் சித்திரைமாதம் 1ந்தேதி வரும் நாளாகும்.

ஆடிப்பண்டிகை என்பது ஆடிமாதம் 18ந்தேதி வரும் நாளாகும். அதனால், இதை ஆடிப்பதினெட்டு நோன்பு என்று சொல்கிறார்கள்.

புரட்டாசியில் சனிக்கிழமை, சரஸ்வதிபூஜை இவைகளுக்கு குறிப்பிட்ட தேதியோ, நாளோ கிடையாது.

ஐப்பசியில் வரும் தீபாவளி நோன்புக்கும் குறிப்பிட்ட தேதியோ, நாளோ கிடையாது.

கார்த்திகை மாதம் வரும் ஜோதிக்கும் குறிப்பிட்டநாள், தேதி இல்ல.

மார்கழிமாதம் திருவாதிரை நோன்புக்கும் குறிப்பிட்ட தேதி, நாள் கிடையாது.

ஆனால், போகிப்பண்டிகை என்பது மார்கழிமாதத்தின் கடைசி நாளில் வரும்.

தைமாதம் பெரிய பொங்கல் தைமாதம் 1ந்தேதி வரும்.
,, 2ந்தேதி மாட்டுப்பொங்கல் வரும்.

தைப்பூசம் என்பது தைமாதத்தில் வரும் பௌர்ணமி நாளன்று வரும் குறிப்பிட்ட தேதி கிடையாது.

மாசிமாதம் சிவன்ராத்திரி என்பது அம்மாதம் வரும் அம்மாவாசை நாளில் வரும். ஆனால், குறிப்பிட்ட தேதி கிடையாது.

பங்குனி மாதம் வரும் யுகாதிப்பண்டிகை பங்குனிமாதம் வரும் அம்மாவாசையன்று வரும் இதற்கும் குறிப்பிட்ட தேதி இல்லை.

மற்றபடி இறந்துபோன முன்னோர்களை கும்பிட வேண்டுமென்றால் இறந்துபோனவர் எந்த மாதத்தில் எந்த நாளில் இறந்தாரோ அந்த நாட்களை குறிப்பிட்டு வருடம் ஒரு முறை அந்த நாட்களில் கும்பிடுவார்கள்.

மற்றபடி மனிதர்கள் இறப்பது அவர்களுக்கு சடங்குகள் ~~செய்வது~~ இவைகள் எல்லாம் செய்வதற்கு குறிப்பிட்ட நாளோ, தேதியோ ~~இவைகளெல்லாம்~~ கிடையாது.

இறந்ததேதி வருஷம் தெரியாமல் ஏதோ ஒரு நாளைக்கு முன்னோர்களை கும்பிட வேண்டுமென்று நினைப்பவர்கள் ஆடிப்பண்டிகையன்றோ, ~~அல்லது தை~~ இறந்துபோன முன்னோர்களுக்கு வேஷ்டி, துண்டு எடுத்துவைத்து கும்பிடுவார்கள். அல்லது புரட்டாசிமாதம் வரும் மஹாளய அம்மாவாசையின்போது முன்னோர்களை கும்பிடுவார்கள் அது முதல் ~~...~~ எப்போதும் அந்தநாளன்று தொடர்ச்சியாக கும்பிடுவார்கள்.

சளி என்பது ஜலதோஷம். இது மனிதர்கள் மழையில் அதிகமாக நனைந்தால் அவர்களுக்கு சளிப் பிடிக்கும். பனிகாலங்களில் அதிகமான பனியில் தலைக்கு ஒன்றும் கட்டிக் கொள்ளாமல் நடந்தால் சளிபிடிக்கும். மேலும், மனிதர்கள் தாங்கள் எப்போதும் இருக்கும் சொந்த ஊரை விட்டு புதிதாக ஒரு ஊருக்குச் சென்று அங்கு அவர்களுக்கு பழக்கமில்லாத கிணற்றுத் தண்ணீரை ஒருநாள், இரண்டுநாள் சாப்பிட்டால் போதும் சளிபிடிக்கும். சிலருக்கு இளநீர், பதநீர் இவைகளை சாப்பிட்டாலும் சளிபிடித்துக் கொள்ளும்.

மேற்கண்ட முறைகளில் சளிபிடிப்பது சிலமனிதர்களுக்குத்தான். உதாரணமாக எனக்கு எப்போதும் அடிக்கடி சளிப்பிடிப்பதில்லை. நீண்ட நாட்களுக்கொருமுறை எப்போதாவது சளிபிடிக்கும் அது ஒருநாள் அல்லது இரண்டு நாளில் சரியாகிவிடும்.

சளிபிடித்தால் அதற்குண்டான குணங்கள் என்னவென்றால், மூக்கின் துவாரங்களில் வெள்ளை நிறமான உளை அடிக்கடி வரும். மூக்கின் துவாரங்கள் அடைத்துக் கொண்டது போலிருக்கும். சளிப்பிடித்தவர்களுக்கு உணவுகளின் சுவை நன்றாகத் தெரியாது. தலைவலி ஏற்படும். காய்ச்சல் வரும் இந்த விதமான குணங்களை யெல்லாம் சளியிடம் உண்டும்.

மூலநோய் என்பது ஒருவகை நோய்தான். இந்த நோய் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியவில்லை. இந்த நோய் மலச்சிக்கல், சிறுநீர் சிக்கல் இப்படிப்பட்ட கஷ்டங்களை உண்டாக்குமென்று நினைக்கிறேன்.

இவைகள் தவிர மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் ~~ஒவ்வொ~~ ஒவ்வொரு சிக்கல் ஏற்படும். அவைகளை அதிகமாக ஒன்றும் விளக்க முடியாது.

9வது கேள்வி.

பதில்: நமசிவாய என்பது சிவமந்திரந்தான். இதில் ஐந்து எழுத்துக்களை உடையது. இதை "பஞ்சாக்ஷரம்" என்று சொல்வார்கள்.

2. அதேபோல் விஷ்ணுவிற்கு நமோ நாராயண என்பது மந்திரம். இதை விஷ்ணுமந்திரம் என்று சொல்வார்கள். ~~இதற்கு~~ இதை நவாக்ஷரம் என்று சொல்கிறார்கள். ஆனால், இதில் ஆறு எழுத்துக்களே அடங்கியுள்ளது.

3. சரவணபவா என்பது முருகன் மந்திரம். இதை ஷடாக்ஷரம் என்று சொல்கிறார்கள். முருகன் மந்திரமும் ஆறு எழுத்துக்களை உடையதுதான்.

பிருந்தாவின் 3.6.68 கடிதத்தின் 2nd copy
இரண்டாவது கேள்விக்கான பதில்
2

50 ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் காலை வேளைகளில் காப்பி, டீ ஆகிய
பானங்கள் சாப்பிட மாட்டார்கள். அப்போது கள், பழைய சோறு
ஆகியவைகளை மட்டுமே சாப்பிட்டு வந்தார்கள். தவிர அக்காலங்க
ளில் காலை வேளைகளில் புளித்தண்ணீரை மக்கள் பெரும்பாலும்
பி சாப்பிட்டு வந்தார்கள். பழக்கமும் அதுதான். பின்னர்
மதுவிலக்குச் சட்டம் அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டது
அதனால் மக்கள் சுதந்திரமாக கள் குடிக்க முடியாமல் போகவே
அந்தப்பழக்கத்தை மறக்கமுடியாமல் காலை வேளைகளில் காப்பி
டீ ஆகிய பானங்களை குடித்துப் பழகினார்கள்.

இக்காலத்தில் காலையில் எழுந்ததும் முதல் வேலையாக
காப்பி அல்லது டீ ஏதோ ஒன்றை குடித்த பின்னர் தான்.
பழைய சோறு, இட்லி, தோசை ஏதோ ஒன்றை சாப்பிடும்
பழக்கத்தை வைத்துக்கொண்டார்கள். அக்காலத்தில்
கள், பழைய சோறு புளித்தண்ணீர் ஆகியவைகளை சாப்பிட்
டு வந்த மக்களுக்கு இருந்த பலம் இப்போது டீ
காப்பி சாப்பிடும் மக்களுக்கு இல்லை. 50 ஆண்டுகளுக்
கு முன்னர் மக்கள் சோளச் சோறு, கம்மஞ் சோறு, ராகி
களி, சோள அம்பலி (கூழ்) ஆகிய உணவுகளை
மட்டுமே சாப்பிட்டு வந்தார்கள். ஆனால் இக்காலத்
தில் அரிசியால் சமைக்கப்படும் உணவுகளை மட்டுமே
சாப்பிடுகிறார்கள். இக்காலத்தில் ராகி, சோளம், கம்பு ஆகிய
உணவுகளை பெரிய குடும்பத்தார்களும், நடுத்தரக்குடு
-ம்பத்தார்களும் ரொம்பத் தரக்குறைவாக நினைக்கிறார்கள்
அவைகளை அவர்கள் சாப்பிடுவதில்லை. அவர்கள் எல்லாம்
அரிசி சாப்பாட்டையே விரும்புகிறார்கள். அதை முதல்
தரமாகவும் நினைக்கிறார்கள்.

அக்காலத்தில் பழைய சோறு, கூழ் சாப்பிட்டு வந்த
மக்கள் இப்போது இட்லி, தோசை, உப்புமா போன்ற நாக
ரீக உணவுகளையே விரும்பி சாப்பிடுகிறார்கள். இதன்
காரணம் நாகரீகத்தின் அடிப்படைதான்......... தவிர,
அக்காலத்தில் மக்கள் தட்டப்பருப்பு வடை, ராகி வடை
சோளப் பணியாரம், சோளத் தோசை, பன்னு கச்சாயம், கார
கச்சாயம், கொழுக்கட்டை, கம்பு மாவு, தினை மாவு
ஆகிய பலகாரங்களை மட்டுமே செய்து சாப்பிட்டார்
கள். அவர்களுக்கு அந்த பலகாரம்தான் செய்யத்தெரியும்!
ஆனால் இக்காலத்திலே! மக்கள் மேலே கண்ட பலகார
ங்களை தரக்குறைவாக நினைக்கிறார்கள். இவர்கள் இட்லி
தோசை, கோதுமை உப்புமா, கோதுமை ரொட்டி, பூரி, பட்ண
ரவை உப்புமா, பட்ண ரவை இட்லி, கேசரி, அல்வா,
மைசூர்ப்பாகு, லட்டு, ஜிலேபி ஆகியவைகளும் உளுந்து வடை
பாசிப்பருப்பு வடை, கடலைப்பருப்பு வடை, உருளைக்கிழங்கு
போண்டா, வெங்காய போண்டா, வாழைக்காய் பஜ்ஜி,

கத்தரிக்காய் மஞ்சி, மிக்சர், பக்கோடா, முறுக்கு, பூந்தி ஆகிய பலகாரங்களை அதிகமாக விரும்புகிறார்கள், நாகரீகமாகவும் நினைக்கிறார்கள். இப்படி மாறுபட்டதெல்லாம் நாகரீகத்தின் முன்னேற்றம்தான். முன் காலத்தில், மொச்சைப் பருப்பு, தட்டைப்பருப்பு, கொள்ளு, கத்தரிக்காய், வாழைக்காய், கொத்தவரங்காய், வெண்டைக்காய், பீர்க்கங்காய், புடலங்காய், பாகற்காய் பச்சைப் பயறு ஆகிய பொருள்களையே குழம்புகளுக்கு உபயோகித்தார்கள். ஆனால் இந்த 50 வருடத்திற்குள் துவரம் பருப்புத்தான் குழம்புகளுக்கு முக்கிய வகை உபயோகிக்கிறார்கள்

காய்கள் :- கத்தரிக்காய், பாகற்காய், வெண்டைக்காய் அவரைக்காய், பீட்ரூட், பீன்ஸ் கேரட், கோஸ், முள்ளங்கி, தக்காளி, முருங்கைக் காய், காலிப் பிளவர், பட்டாணி ஆகியவைகளையே சமைக்கிறார்கள். விரும்புகிறார்கள்!

50 வருடங்களுக்கு முன்பு கல்யாணம், திரட்டி, காதுகுத்து, எளிதீங்கள், ஆகிய விசேஷங்கள் நடந்தால் அங்கு மொச்சைப் பருப்பு அல்லது தட்டைப்பருப்புப் போட்டு ஒரு குழம்பு, ஒரு ரசம் வைத்து, அரசாணிக்காய் பொரியல் செய்து அத்துடன் சர்க்கரை, பழம் இவைகளும் சேர்த்து விருந்தினர்களுக்கு சாப்பாடு கொடுப்பார்கள். ஆனால் இந்த 50 வருடத்திற்குள் துவரம் பருப்பு, துவரம்பருப்பு சாம்பார் கூடப் பருப்புக்கூட்டு, புளிக்குழம்பு, தயிர்க்குழம்பு, மோர்க்குழம்பு, பொரியல் சுமார் 4 வகை! அப்பளம், ஊறுகாய், வடை பாயாசம், லட்டு அல்லது மைசூர்பாகு சர்க்கரை பழம் இவைகள் சேர்த்து விருந்தினர்களுக்கு சாப்பாடு கொடுக்கிறார்கள் இவைகள் எல்லாம் நாகரீகத்தின் முன்னேற்றம் தான்.!!

தவிரவும் முன்காலத்தில் மக்கள் குழம்புகளுக்கு தேங்காய் அதிகம் உபயோகிக்க மாட்டார்கள். இக்காலத்தில் தேங்காய் அதிகமாக உபயோகிக்கிறார்கள். மற்றபடி மாமிச வகைகளில் எதுவும் அதிக மாற்றம் இருக்காது. அக்காலம் போலவே இக்காலத்திலும் இருக்கும்.

இந்தமாதிரி இங்கு நாகரீகம் ஆங்கிலேயர் இங்கு வந்து ஆட்சி செய்யும் காலத்தில் ஏற்பட்டதாக இருக்கலாம்.

மற்றபடி 50 வருடத்திற்கு முன்பு மக்களிடம் இருந்த முடி அலங்காரம், உடை அலங்காரம் எல்லாமே இப்பொழுது 50 வருடத்திற்குள் மாறுபட்டிருப்பதாக நினைக்கிறேன். இவைகள் எல்லாமே நாகரீக முன்னேற்றந்தான்........

[illegible] 3. சமூக வேறுபாடுகள்.

கீழ்கண்ட ஜாதியினர் சாப்பிட்ட இலையை

| கீழ்கண்ட ஜாதியினர் சாப்பிட்ட இலையை ↓ | பிராமணர் | கணக்கப்பிள்ளை | கவுண்டர் | முதலியார் | பண்டாரம் | உடையார் | நாடார் | கொங்கு செட்டியார் | ஆசாரி | நாயக்கர் | நாவிதன் | வண்ணான் | பறையன் | மாதாரி | குறவன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. கணக்கப்பிள்ளை | ✗ | ✓ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ |
| 2. பிராமணர் | ✓ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ |
| 3. கவுண்டர் | ✗ | ✗ | ✓ | ✓ | ✓ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ |
| 4. பண்டாரம் | ✗ | ✗ | ✗ | ✓ | ✓ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ |
| 5. முதலியார் | ✗ | ✗ | ✓ | ✓ | ✓ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ |
| 6. உடையார் | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✓ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ |
| 7. நாடார் | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✓ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ |
| 8. கொங்கு செட்டியார் | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✓ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ |
| 9. ஆசாரி | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✓ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ |
| 10. நாயக்கர் | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✓ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ |
| 11. நாவிதன் | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✓ | ✗ | ✗ | ✗ | ✗ |
| 12. வண்ணான் | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✓ | ✗ | ✗ | ✗ |
| 13. பறையன் | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✓ | ✗ | ✗ |
| 14. மாதாரி | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✓ | ✗ |
| 15. குறவன் | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✗ | ✓ |

ஒ,

9 வது கேள்வி பதிலின் சில குறிப்புகள்.

கணக்குப்பிள்ளை, வாணியன், (கோமுட்டி செட்டியார், சோனி ஆசாரி) இவர்கள் சாப்பிடும் இலைகளை எப்போதும் வேறு எந்த ஜாதியும் எடுக்க மாட்டார்கள். காரணம் அவர்கள் வீட்டில் உண்டதை மற்ற ஜாதிகளை அனுமதிப்பதில்லை. ஆகையால், அவர்கள் சாப்பிடும் இலைகளை அவர்களே எடுத்துக் கொள்வார்கள்.

தவிர எந்த ஜாதிகள் சாப்பிடும் இலைகளை எந்த எந்த ஜாதிகள் எடுப்பார்கள்? என்ற இக்கேள்விக்கு சரியான பதில் எழுத முடியாது.

உதாரணமாக ஒரு பண்டாரம் நல்ல செல்வாக்குடையும், வசதியுடனும் இருந்தால் அவர் ஒரு கவுண்டர் வீட்டில் சாப்பிட்டால் அந்த இலையை அவர் எடுக்க மாட்டார் எடுக்கவும் விட மாட்டார்கள். அந்த வீட்டில் உள்ளவர்கள்தான் (கவுண்டர் வீட்டில்) பண்டாரம் சாப்பிட்ட இலையை எடுப்பார்கள். இப்படி எல்லா ஜாதியிலும் நடக்கும்.

ஒரு கவுண்டர் ரொம்பவும் ஏழையாக இருந்தால் அவர் போய் ஒரு செட்டியார் வீட்டில் வீட்டு வேலைக்குச் சேர்ந்தால் அவர்கள் சாப்பிடும் இலைகளை இந்தக் கவுண்டர்தான் எடுக்க வேண்டும். இப்படி எல்லா ஜாதிகளிலும் ஏற்படுவது பழக்கம். ஆகையால், இதைப்பற்றி விபரமாக ஒன்றும் எழுத முடியாது.

குறிப்பு. பட்டியலில் * இந்தமாதிரி குறிபோட்டிருப்பது கவுண்டர் வீட்டு விசேஷங்களில் அவர்கள் சாப்பிட்ட இடத்தை நாவிதன் ஈக்கிமார் கொண்டு சுத்தம் செய்வான். ஆனால் இலைகளை எடுக்க மாட்டான். இதை நாவிதன் செய்வது கவுண்டர் வீடுகளில் மட்டும்தான். மற்ற ஜாதிகளுக்கு செய்யமாட்டான்.

பட்டியலில் ✓ ← இந்தமாதிரி குறியிட்டிருப்பது இலையை எடுக்கும் ஜாதியை குறிப்பதாகும்.

× ← இந்த மாதிரி குறியிட்டிருப்பது இலையை எடுக்கமாட்டார்கள் என்பதை குறிப்பதாகும்.

2nd copy

May 8, 1968 கடிதத்தின் 4 வது கேள்வியின் பதில்.

△ அமருபவர்களை (உட்காருபவர்களை) குறிக்கும் அடையாளம்.

△ அமர அனுமதி அளிப்பவர்களை குறிக்கும் அடையாளம்.

1 வீட்டின் வெளி வாசல்

2 வீட்டின் உள்வாசல் அல்லது தொட்டி வாசல்

3 வீட்டின் திண்ணை

4 சமையல் அறை.

✓ அனுமதியளிக்கும் குறி
✗ அனுமதியளிக்காத குறி

A — பிராமணர்
B — கணக்குப்பிள்ளை
C — கவுண்டர்
D — முதலியார்
E — பண்டாரம்
F — உடையார்
G — நாடார்
H — கோமுட்டி செட்டியார்
I — ஆசாரி
J — நாய்க்கன்
K — நாவிதன்
L — வண்ணான்
M — பறையன்
N — மாதாரி
O — குறவன்.